<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 177/2015

இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 02 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நித்தியானந்தன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சுப்பிரமணியம் | கிராமம் | : | |
| வயது | : | 32 | தாலூக்கா | : | |
| நாள் | : | 02-01-2025 | மாவட்டம் | : | திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1) நான் கடந்த 1991ம் வருடம் பிறந்தேன். எங்களுக்கு பாத்தியப்பட்ட பூமியின் மொத்த விஸ்தீரணம் 3.98 ஏக்கராகும். பூமிக்கு வடபுறம் கிழமேலாக ரோடு இருக்கிறது. ரோட்டை ஒட்டியே பாறை குழி இருக்கிறது. பாறை குழி மொத்தமாக 1 ஏக்கரில் இருக்கிறது என்றால் எனக்கு அது பற்றி சரியாக தெரியவில்லை. கடந்த 21.08.1995ம் தேதியில் ஒரு சரோஜினி என்பவருக்கு என் தகப்பனார், அவரது பொது அதிகாரம் பெற்ற நபர் மூலம் 4322 -1/2 சதுரடி நிலத்தை கிரயம் செய்து கொடுத்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) கிரய பத்திரத்தில் பாறை குழிக்கும் தெற்கு, மேற்கு என செக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குச் சொத்தை சுற்றியுள்ள சொத்தின் விவரம் எனக்கு தெரியும். கடந்த 19.03.2001ம் தேதி ஒரு இளவரசி என்பவர் பெயரில் ஒரு கிரயம் ஏற்பட்டு,

அதிலும் பாறை குழிக்கு தெற்கு என கண்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) அதே போல் கடந்த 11.07.2005 ம் தேதியிட்ட ஒரு ராஜேஸ்வரி என்பவர் பெயரில் கிரயம் ஏற்பட்டு, பின்னிட்டு கடந்த 23.07.2007 ம் தேதியன்று ஜெயலட்சுமி என்பவர் பெயரில் ஒரு கிரயம் ஏற்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். வழக்குச் சொத்து விவரத்தில் ஜெயலட்சுமியின் இடத்திற்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜெயலட்சுமியின் கிரய பத்திரத்தில் 20 அடி தென்வடல் ரோட்டுக்கும் மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) தாவாச் சொத்துக்கு மேற்குபுறத்தில் வேலி இருக்கிறது என்றால் சரிதான். வேலி பிரதிவாதியால் அமைக்கப்பட்டது என்றால் என்னுடைய இடத்தில் வேலி அமைத்துள்ளார். நாங்கள் சுத்தம் செய்த பிறகு, கம்பி வேலி அமைத்து கேட் போட்டிருக்கிறார். வேலிக்கு மேல்புறத்தில் குட்டை இருக்கிறது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள இடம் வேலிக்கு மேல்புறமுள்ள ராஜேஸ்வரிக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். புகைப்படங்கள் (8 எண்ணிக்கைகள்) மற்றும் சி.டி **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த இடத்திற்கு மேற்குபுறத்தில் சர்ச் இருக்கிறது என்றால் சரிதான். சர்ச் அமைந்துள்ள இடம் மற்றும் பிரதிவாதியின் இடம் அமைந்துள்ள பகுதி ஆகியவை கல்குழி என்றால் சரியல்ல. தாவா சொத்து லாரி செல்வதற்காக 10 அடி சரிவாக உள்ள ரோடு

என்றால் சரிதான். பிரதிவாதிக்கு சொத்தை விற்பனை செய்தபோது, தாவா சொத்து ரோடாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. அதேபோல் ஜெயலட்சுமியின் கிரய பத்திரத்திலும் தாவா சொத்து ரோடாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6) தாவா சொத்து ரோடாக காட்டப்பட்டுள்ள போது, அந்த சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. எனவே வழக்கில் எத்தகைய பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கதக்கதில்லை என்றால் சரியல்ல. எனவே வழக்கு பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.01.02 15:29:37 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.